மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த வகையான பாதுகாப்பு அவர்களுக்குத் தரப்படவேண்டும் என்று விவரக் குறிப்பு இல்லை. அவற்றைத் தந்தால் அதுபற்றிப் பரிசீலிக்கலாம். இப்போது சாதாரணமாக ஆங்காங்கே உள்ள மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக உரிமம் மற்றவைகளை வழங்குவதை அரசு மேற்கொண்டிருக்கின்றது. ஆனால் சில இடங்களிலே மீனவர்கள் அல்லாதவர்கள் அப்படிப்பட்ட சங்கங்களில் இடம் பெற்றிருக்கிறார்கள். எனவே இப்போது மீனவர்கள் மட்டும்தான் கூட்டுறவுச் சங்கங்களில் ஈடுபடல் வேண்டும் என்று திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறோம். எனவே மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு உரிமம் மற்றவைகளை வழங்க வேண்டும், அவர்களுக்குப் பாதுகாப்புத் தரவேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில்தான் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2. தகவல் கோரல்

(அ) அதிகாரிகள் மாடம் காலியாக இருத்தல்

திரு. எல். இளையபெருமாள்: தலைவரவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர், கடந்த இரண்டு தினங்களாகவே இங்கே முக்கியமாக ஆளுநர் உரையின்மீது பல்வேறு பிரச்சினைகளைப் பற்றிப்பேசி பல்வேறு கேள்விகள் கேட்கின்றபோது அதிகாரிகள் இருக்கக் கூடிய இடத்திலே ஒரு அதிகாரி கூட வருவதில்லை என்ற நிலைமை இருக்கின்றது. நேற்று கூட மாலைப் பொழுதில்தான் அதிகாரிகள் வந்தார்கள். இன்றும் ஒரு அதிகாரிகூட வரவில்லை. அதற்கு என்ன காரணம்? அதிகாரிகள் ஸ்ட்ரைக் செய்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதிகாரிகள் வருவதும், வராததும் அரசினுடைய பொறுப்பு. இப்போது அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறீர்கள். எனவே இனிமேல் வருவார்கள் என்று நினைக்கிறேன்.

1. வினாக்கள்—விடைகள்—தொடர்ச்சி

உடுக்குறியிட்ட வினாக்கள்—தொடர்ச்சி.

காரங்காட்டில் இறால் வளர்ப்புப் பண்ணை அமைக்கும் திட்டம்

வினா எண் 102—திரு. ச. அங்குசாமி மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவாடானை தொகுதி காரங்காட்டில் இறால் வளர்ப்புப் பண்ணை தொடங்குவது குறித்து செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?